# பௌராவின் பிறப்புக் கோட்பாடும் தமிழ்க் கதைப்பாடல்களும்

**திருமதி அ.ரூபாதேவி**
**உதவிப் பேராசிரியர்,தமிழியல் துறை,**
**ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.**
rubadevi.a@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் எப்போதும் எதிலும் பிறரைக் காட்டிலும் சிறந்தவனாக விளங்க வேண்டும் என்ற வேட்கையினை உடையவன். இவ்வேட்கையின் விளைபொருளாகவே மனிதனை உயர்த்திப்பாடும் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. தொடக்க காலத்தில் மனிதனைப் பிறரிடமிருந்து சிறப்பித்துக் காட்டும் பண்புகளில் தலைசிறந்து விளங்கியது வீரமே. இக்கருத்தினை தொடக்கால இலக்கியங்கள் அனைத்தும் விளக்கி நிற்கின்றன.இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியரான சி.எம்.பௌரா ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள சுமார் 30 நாடுகளின் வீரநிலை இலக்கியங்களை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு ஆராய்ந்தார். அவ்வாய்வின் விளைவினைத் தனது “வீரநிலைக் கவிதை” என்ற நூலில் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார். எந்தவொரு இலக்கியத்திற்கும் தொடக்கம் என்பது முக்கியத்தும் வாய்ந்தது. வீரநிலை இலக்கியத்தில் கதைத்தலைவர்களின் பிறப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது என்கிறார் பௌரா. மேலும் கதைத் தலைவர்கள் பெரும்பாலும் கடவுள் அருளால் பிறந்தவர்களாகவோ தேவதைக்குப் பிறந்தவர்களாகவோ படைக்கப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டி, இதற்குக் காரணமாகக் கதைத் தலைவர்களின் புகழினைத் தொடக்க நிலையிலேயே உயர்த்திக் காட்டவும் பிறரைவிட வீரத்தில் மேம்பட்டவர்கள் என்பதை உணர்த்துவதற்குமே இவ்வுத்தி பயன்படுத்தப்படுகின்றது என்றும் கூறியுள்ளார். இதுவே அவரின் பிறப்பு குறித்த கோட்பாடாகும். பொதுவாகத் தமிழ்க் கதைப்பாடல்களின் கரு கதைத் தலைவனின் பிறப்பிலிருந்து தொடங்கி அவனின் இறப்புவரையிலான நிகழ்வுகளையோ அல்லது தலைவனின் வெற்றி, தோல்விகளையோ பேசிச் செல்கின்றது. அந்த வகையில் தமிழ்க் கதைப்பாடல்களான அண்ணன்மார் சுவாமி கதை, சேர்வைக்காரன் கதை, தோட்டுக்காரி கதை, ஈன முத்துப் பாண்டியன் கதை, சிவனணைஞ்சான் கதை ஆகியவற்றுள் இடம்பெற்றுள்ள கதைத்தலைவர்களின் பிறப்பினைப் பௌராவின் பிறப்புக் கோட்பாடு அடிப்படையில் இக்கட்டுரை ஆய்கிறது.

**ஆய்வு நோக்கம்**

நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் அமைந்துள்ள பிறப்புக்கோட்பாட்டை பௌராவின் வழிநின்று வெளிப்படுத்து வதை நோக்கமாகக் கெரண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**திரவுச் சொற்கள்**

வேட்கை, வீரநிலை இலக்கியங்கள், கடவுள் அருள், தேவதை, பிறப்புக் கோட்பாடு, தானதருமங்கள்.

மனிதன் எப்போதும் எதிலும் பிறரைக் காட்டிலும் சிறந்தவனாக விளங்க வேண்டும் என்ற வேட்கையினை உடையவன். இவ்வேட்கையின் விளைபொருளாகவே மனிதனை உயர்த்திப்பாடும் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. தொடக்க காலத்தில் மனிதனைப் பிறரிடமிருந்து சிறப்பித்துக் காட்டும் பண்புகளில் தலைசிறந்து விளங்கியது வீரமே. இக்கருத்தினை தொடக்கால இலக்கியங்கள் அனைத்தும் விளக்கி நிற்கின்றன.இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியரான சி.எம்.பௌரா ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள சுமார் 30 நாடுகளின் வீரநிலை இலக்கியங்களை ஆய்விற்கு எடுத்துக்கொண்டு ஆராய்ந்தார். அவ்வாய்வின் விளைவினைத் தனது “வீரநிலைக் கவிதை” என்ற நூலில் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளார். எந்தவொரு இலக்கியத்திற்கும் தொடக்கம் என்பது முக்கியத்தும் வாய்ந்தது. வீரநிலை இலக்கியத்தில் கதைத்தலைவர்களின் பிறப்பு என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது என்கிறார் பௌரா. மேலும் கதைத் தலைவர்கள் பெரும்பாலும் கடவுள் அருளால் பிறந்தவர்களாகவோ தேவதைக்குப் பிறந்தவர்களாகவோ படைக்கப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டி, இதற்குக் காரணமாகக் கதைத் தலைவர்களின் புகழினைத் தொடக்க நிலையிலேயே உயர்த்திக் காட்டவும் பிறரைவிட வீரத்தில் மேம்பட்டவர்கள் என்பதை உணர்த்துவதற்குமே இவ்வுத்தி பயன்படுத்தப்படுகின்றது என்றும் கூறியுள்ளார். இதுவே அவரின் பிறப்பு குறித்த கோட்பாடாகும்.

பொதுவாகத் தமிழ்க் கதைப்பாடல்களின் கரு கதைத் தலைவனின் பிறப்பிலிருந்து தொடங்கி அவனின் இறப்புவரையிலான நிகழ்வுகளையோ அல்லது தலைவனின் வெற்றி, தோல்விகளையோ பேசிச் செல்கின்றது. அந்த வகையில் தமிழ்க் கதைப்பாடல்களான அண்ணன்மார் சுவாமி கதை, சேர்வைக்காரன் கதை, தோட்டுக்காரி கதை, ஈன முத்துப் பாண்டியன் கதை, சிவனணைஞ்சான் கதை ஆகியவற்றுள் இடம்பெற்றுள்ள கதைத்தலைவர்களின் பிறப்பினைப் பௌராவின் பிறப்புக் கோட்பாடு அடிப்படையில் இக்கட்டுரை ஆய்கிறது.

**அண்ணன்மார் சுவாமி கதை**

கொங்குப் பகுதியில் வழங்கப் பெறும் கதைப்பாடல் இது. இதன் கதைத்தலைவர்கள் பொன்னரும் சங்கரும் ஆவர். மேற்கண்ட கதைத் தலைவர்களின் பெற்றோரான குன்றுடையானும் தாமரையும் நெடுநாட்களாகக் குழந்தை இல்லாமல் மிகுந்த வருத்தமுற்றுக் காணப்படுகின்றனர். தாமரையாள் குழந்தையில்லாக் குறையை **நினைத்து வருந்தி,**

**"பிள்ளையில்லாச் சோறு எனக்கு புழுவோட ஒண்ணாச்சு**
**மைந்தனில்லாச் சோறு எனக்கு மருந்தோட ஒண்ணாச்சு"(அ.க.17-18)**

எனக் கூறுகிறாள். இவ்விருவரும் பிள்ளைவேண்டித் தானதருமங்கள் செய்தல், பல்வேறு கோவில் தலங்களுக்குச் செல்வதுமாக உள்ளனர். இவர்களின் பக்தியினை உணர்ந்த சிவன் பார்ப்பனர் வேடத்தில் வந்து,

**"தன்னாசி கோவிலிலே தவமிருந்து வரங்கேட்டால்**
**தன்னாசி மனமிரங்கி சாமி வரங்கொடுப்பார்"(அ.க.97-98)**

என்று சொல்லி மறைந்துவிடுகின்றார். சிவன் கூறியதைப் போலவே குன்றுடையானும் தாமரையும் பொன்னம்பலம் வந்து சிவபெருமானை வேண்டித் தவம் இருக்கின்றனர். இங்கே சிவனிடம் பிள்ளைவரம் வாங்கிப் பின்பு பிள்ளை பெறுகின்றனர். அப்பிள்ளைகளே கதைத் தலைவர்களான பொன்னரும் சங்கரும் ஆவர்.

**சேர்வைக்காரன் கதை**

திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கி வரக்கூடிய கதைப்பாடல் இது. இதன் கதைத் தலைவர்கள் சின்னபலவேசம் மற்றும் பெரியபலவேசம் ஆவர். மேற்கண்ட கதைத் தலைவர்களின் பெற்றோரான இருளப்பனும் முத்தாயும் பல வருடங்களாகக் குழந்தையில்லாமல் வாடிவருகின்றனர். முத்தாயி, தனக்குக் குழந்தையில்லாமையை நினைத்து,

**"என்னசெல்வ மிருந்தாலும் இழுக்கலவோ என்கணவா**
**பெண்ணாகப் பிறந்ததனால் பிள்ளையில்லாப் பாவியென்பர்**
**என்பருவ முள்ளபெண்கள் எத்தனைபேர் பெற்றெடுத்தார்"(சே.க.68-70)**

பிறகு பிள்ளைவரம் வேண்டிப் பல தலங்களுக்கும் செல்கின்றாள். தான தருமங்கள் செய்கின்றனர். சிவனிடம் பிள்ளை வேண்டித் தவமிருக்கின்றாள். பின்பு குறத்தியை அழைத்துக் குறி கேட்கின்றனர். குறத்தியும் அவளது நிலையினை விரிவாக விளக்கி, நீ திருச்செந்தூர் சென்று தவமிருந்தால் உனக்குப் பிள்ளைவரம் கிட்டும் எனக் கூறுகின்றாள். முத்தாயும் அவ்வாறே திருச்செந்தூர் சென்று,

**“தவமிருந்தாள் நாற்பதுநாள் தையல் நல்லாள் நித்திரையில்**
**பண்டாரக் கோலமுடன் பரமசிவன் திருமகனார்**
**வந்து மணி மண்டபத்தில் மங்கை நல்லாளோடு உரைப்பார்**
**மயங்காதே முத்தாயி மதலைதந்தேன் எனவுரைத்தார்”(சே.க.260-263)**

முருகனிடம் பிள்ளைவரம் பெற்ற முத்தாயி சின்னபலவேசம், பெரியபலவேசம் என்ற இரண்டு ஆண்பிள்ளைகளைப் பெறுகின்றாள். இவர்களே இக்கதையின் கதைத்தலைவர்கள்.

**தோட்டுக்காரி கதை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கி வரக்கூடிய கதைப்பாடல் இது. இதன் கதைத் தலைவி தோட்டுக்காரியாவாள். முட்டப்பதி என்னும் நாட்டினை ஆண்டு வரக்கூடிய சேனாண்டிராசன் தன் மனைவி மந்திரப் பூமாலையுடன் சேர்ந்து குழந்தையின்மையால் மிகவும் வருந்துகின்றான். மந்திரப் பூமாலை தனக்குச் செல்வம் மிகுதியாக இருந்தும் அவற்றை ஆளத் தனக்கு ஒரு குழந்தை இல்லையென்பதால்,

**“அம்புபட்ட மானானேன் அலையிலிட்ட துரும்பானேன்**
**கொம்பிழந்த மந்தியைப்போல் குழந்தையில்லாக் குறையானேன்**
**ஆடாத செக்கானேன் அரசிழந்த பதியானேன்**
**ஓடாத தேரானேன் ஊமைகண்ட கனவானேன்**
**மின்னிழந்த மஞ்சானேன் வேரிழந்த மரமானேன்”(தோ.க.21:1-5)**

பிறகு தானதருமங்கள் பல செய்கின்றாள். பல திருத்தலங்களுக்கும் செல்கின்றாள். இறுதியில் குறத்தி ஒருத்தியினை அழைத்துக் குறி கேட்கின்றாள். அவள் உனக்குக் குழந்தைவரம் வேண்டுமானால் சிவனுக்குக் கோயில் கட்டித் தவம் செய்து வந்தாயானால் உறுதியாகக் குழந்தைவரம் சிவன் அருள்வார் என்கின்றாள். மந்திரப் பூமாலையும் அவ்வாறே செய்கின்றாள்.

**“எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி இருந்தவரும் தான்புலம்பி**
**கண்துயிலும் மாதுமின்னாள் கனவுகண்டாள் திருத்தேவி**
**மைவிழியாள் கண்ணதிலே (ஒரு) மாயக்கனா கண்டனளாம்”**

**(தோ.க.47:1-3)**

அக்கனவின் வழியாகத் தங்களுக்குப் பிள்ளைவரம் கிடைக்கப்போவதை உணர்ந்த மந்திரப் பூமாலையும் கோணாண்டிராசனும் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றனர். விரைவிலேயே தோட்டுக்காரியை மந்திரப் பூமாலை பெற்றெடுக்கிறாள். இவளே இக்கதையின் தலைவி.

**ஈனமுத்துப் பாண்டியன் கதை**

இது திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கி வரக்கூடிய கதைப்பாடல். இக்கதைப்பாடலின் தலைவன் ஈனமுத்துப் பாண்டியன். இவனின் பெற்றோர்களான நாராயணனும் கரிப்பியும் நீண்டநாட்களாகக் குழந்தை இல்லாமல் வருந்தி வருகின்றனர். கரிப்பி குழந்தைவரம் வேண்டி முருகனை நினைத்துத் தவம் இருக்கின்றாள். இதனை,

**"குழந்தையில்லை என்று சொல்லி**
**சுப்பிரமணியர் கோவில் போய்**
**மாதாந்த சேர்வை செய்யலுற்றான்"(ஈ.பா.8-10)**

என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன. இவ்வாறு கரிப்பி தவமிருக்கும் வேளையிலே முருகன் அவளுக்குக் காட்சி தந்து,

**"பிறக்கிறது ஆண் குழந்தை**
**பேரு நல்ல ஈனமுத்து**
**என்று சொன்னாரே சுப்பிரமணியர்"(ஈ.பா.22-24)**

முருகனின் அருள்படியே அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கின்றது. அவனே கதைத் தலைவனான ஈனமுத்து.

**சிவனணைஞ்சான் கதை**

திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கி வரக்கூடிய கதைப்பாடல். இக்கதைத் தலைவன் சிவனணைஞ்சான். இவனது பெற்றோர் செங்கோட்டையினை ஆண்டு வரக்கூடிய செம்பவளராசன் - பொன்னுருவி ஆகியோர் ஆவர். இக்கதையில் பொன்னுருவி குழந்தையின்மையால் பல வருடங்களாக வாடிவருகிறாள். தனக்குப் பிள்ளை பிறக்காததை நினைத்து,

**"முன்செய்த தீவினையோ முதல்வன் செய்ததுவோ**
**பின்செய்த பொல்லாங்கோ பிள்ளையில்லாமல் போனதெல்லாம்**
**..............................................**
**மதலையில்லா வாழ்வதுதான் வாழ்வதிலும் வாழ்க்கையில்லை"**

**(சி.க.81-86)**

எனப் புலம்புகிறாள்.

பின்பு தான தருமங்கள் செய்கின்றாள். பல திருத்தலங்களுக்கும் செல்கின்றாள். இறுதியில் குறத்தியை அழைத்துக் குறிகேட்கின்றாள். அவள் தென்காசியில் பாழடைந்த கோயிலொன்றைப் புனரமைத்துப் பூசை செய்து வந்தால் உனக்கு உறுதியாகக் குழந்தை

பிறக்கும் எனக் கூறுகின்றாள். பொன்னுருவியும் அவ்வாறே செய்து தவமிருந்து வருகின்றாள்.

**“அந்தநல்ல வருந்தவசை ஆதிசிவன் தானறிந்து**
**கந்தமருங் குழலாளுக்குக் கனவுகாண வேணுமென்று**
**குஞ்சிநல்ல சடையுரளக் குறுமுனிபோல் வேசங்கொண்டு**
**சித்தாண்டார் வடிவாகத் திருச்செவியில் சொல்லுவாராம்”**

**(சி.க.944-947)**

இவ்வாறாகச் சிவன் கனவின் வழியாக அவளுக்குக் குழந்தை பிறக்கப் போகின்றது என்பதை உணர்த்த, அதையுணர்ந்த பொன்னுருவியும் செம்பவளராசனும் மகிழ்ச்சியடைகின்றனர். இறுதியில் அவர்களுக்கு மகனாகச் சிவனணைஞ்சான் பிறக்கின்றான். அவனே இக்கதையின் தலைவன்

இதுவரை நாம் கண்ட கதைத் தலைவர்கள் அனைவரும் பௌரா குறிப்பிடுவதைப் போன்றே கடவுள் அருளினால் பிறந்தவர்களாக உள்ளனர். இது அவர்களின் புகழுக்குரிய அடையாளமாகவும் விளங்குகின்றது. மேலும் பௌரா குறிப்பிடும் இத்தகைய பிறப்புடையவர்கள் வீரத்தில் சிறந்து விளங்குவார்கள் என்பதும் முழுக்கதையோட்டத்தினைப் பார்க்கும்போது விளங்குகின்றது. எடுத்துக்கொண்ட கதைப்பாடல்களின் கதையமைப்பானது,

- அண்ணன்மார் சுவாமி கதை – பொன்னரும் சங்கரும் தங்களுடைய எதிரிகளை வீரத்தால் வீழ்த்தி இறுதியில் விதிவசத்தால் மடிதல்.
- சேர்வைக்காரன் கதை – சின்னபலவேசமும் பெரிய பலவேசமும் தங்களுடைய வீரத்தால் எதிரியினை வீழ்த்தி இறுதியில் வஞ்சத்தால் மடிதல்.
- தோட்டுக்காரி கதை – தன்னுடைய பேரழகே போருக்குக் காரணம் என்பதனால் தீப்புகுதல்.
- ஈனமுத்துப் பாண்டியன் கதை – தன்னுடைய வீரத்தால் எதிரிகளை வீழ்த்தி இறுதியில் கள்ளக்காதலினால் வீழ்தல்.
- சிவனணைஞ்சான் கதை – சிவனணைஞ்சான் மிகு வீரனாக விளங்கி இறுதியில் கள்ளக்காதலினால் வீழ்தல்.

என்ற வண்ணம் அமைகின்றது. மேற்கண்டவற்றை பௌராவின் பிறப்புக் கோட்பாட்டோடு ஒப்பு நோக்கும் போது ஆண் கதைத் தலைவர்களின் பிறப்பு உத்தியானது அவர்களை மிகு வீரர்களாகப் புனையப் பயன்படுத்தப்பட்டு உள்ளமை தெளிவாகின்றது. இதற்கு மாறாக, பெண் கதைத் தலைமையாக அமையும்போது அவளின் பிறப்பானது பிற பெண்களைக் காட்டிலும் பேரழகுமிக்கவள் என்பதைக் காட்ட மட்டுமே

பயன்படுத்தப்பட்டுள்ளமையை உணரமுடிகின்றது. உஸ் பெகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அல்பமிஸ் என்ற வாய்மொழி காப்பியத்தின் தலைவியான பார்சினும் கடவுள் வரத்தினால் பிறந்தவளாக இருப்பினும் பேரழகியாக மட்டுமே விளங்கியமை தோட்டுக்காரியோடு ஒப்புநோக்கத்தக்கது. உலகமனிதன் நாடு, மொழி, இனம், பண்பாடு போன்ற பல்வேறு காரணிகளால் பிரிந்திருந்தாலும் அவன் படைக்கின்ற இலக்கியத்துள் ஒருபுடை ஒப்புமையினையும் காணமுடிகின்றது. ஒரு கதைத் தலைவனின் பிறப்பில் தெய்வக்கூறுகளைத் தொடர்புபடுத்திக் கதைத்தலைவனின் வீரத்தினை மற்றெல்லாரையும்விட உயர்த்திக்காட்டுதல் என்ற கூறு கதைப்பாடலில் ஒரு பொதுக்கூறாகப் பயன்படுத்தப்படுகின்றமையை இதன்வழி அறியமுடிகின்றது. சீன வீரநிலைப் பாடல்களோடு ஐரோப்பிய காப்பியங்களை ஒப்பிட்டு ஆராய்ந்த மரிசான் அவற்றுக்கிடையில் சில பண்புகளில் ஒப்புமைகளைக் கண்டார். இவ்வொற்றுமைக்குக் காரணம் மனிதமனத்தின் பொது அனுபவமே என்ற கருத்தினை முன்வைத்துள்ளமையும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

**அடிக்குறிப்பு**

1. C.M.Bowra, Heroic Poetry, Pa.94-95
2. Marie chan, Chinese Heroic poems and European Epic, P.168.

**துணைநூற்பட்டியல்**

1. அண்ணன்மார் சுவாமி கதை, சக்திகனல்(ப.ஆ), விசயா பதிப்பகம், கோவை-1.

2. சேர்வைக் காரன் கதை, ஏ.என்.பெருமாள்(ப.ஆ), ஐந்திணைப்பதிப்பகம், சென்னை -5.

3.தோட்டுக்காரி கதை, வ.அலமேலு(ப.ஆ), உ.த.நி. சென்னை-113.

4.ஈனமுத்துப் பாண்டியன் கதை, க.சண்முகசுந்தரம்(தொ.ப) தன்னனானே பதிப்பகம், பெங்க;ர்-38.

5.சிவனணைஞ்சான் கதை, சூ.நிர்மலாதேவி(ப.ஆ), உ.த.நி, சென்னை-113.